முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,

நாள். 10.09.2025.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**அசல் வழக்கு எண். 104/2025**

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ம் நாள் புதன்கிழமை நீதிமன்ற சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | ராஜேந்திரன் | வயது | : | 46 |
| ஊர் | : | அனக்காவூர் | தொழில் | : | இளநிலை கட்டளை சார்வாளர், மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு. |

**முதன்மை விசாரணை:**

நான் இவ்வழக்கில் நீதிமன்ற சாட்சியாவேன். என்னுடைய வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். வழக்கின் அழைப்பாணையும் வாதுரையின் நகலையும் நான் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு மாண்புமிகு சார்பு நீதிமன்றத்த்தில் இளநிலை கட்டளை சார்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண். 104/2025 என்ற வழக்கில் 25.08.2025-ல் 1-ம் பிரதிவாதி ஆகிய பிரகாசம் த/பெ. சீனு என்பவருக்கு நீதிமன்ற நோட்டீஸ் கட்டளை செய்ய அதனை நிறைவேற்றும் பொருட்டு 25.08.2025 ஆம் தேதியன்று பிற்பகல் 3.00 மணி அளவில், மேற்சொன்ன பிரதிவாதியின் விலாசமான வெம்பாக்கம் வட்டம், வடமணப்பாக்கம் கிராமம் சென்று அவரை நேரில் பார்த்து அவரிடம் நீதிமன்ற நோட்டீஸில் உள்ள விவரத்தைப்பற்றி எடுத்து கூறினேன். அவர் முன்னுக்குப் பின் முரணாக பேசி தன்னால் வழக்கின் அழைப்பாணையும் வாதுரையின் நகலையும் வாங்க முடியாது என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.நகல்களை ஒட்டவும் அனுமதிக்கவில்லை. பிறகு நான் வழக்கின் அழைப்பாணையையும் வாதுரையின்

நகலையும் நீதிமன்றத்திற்கு மேற்சொன்ன தகவலோடு அழைப்பாணையை மறுத்துவிட்ட காரணத்தினால் சார்வு செய்ய முடியவில்லை என்று சொல்லி திருப்பி அனுப்பி வைத்தேன். இத்துடன் இந்த சாட்சியம் முடிவடைகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாாத்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2025.09.10 17:20:36 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு